**பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் தொழில்நுட்ப பயிற்சியினை முன்னேற்றி மேம்படுத்தல் செயற்திட்டம் - 2018**

---

பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் தொழில்நுட்ப பயிற்சியினை முன்னேற்றி மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அவுஸ்ரியா ரெய்பெசன் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 நவம்பர் 02 ஆந் திகதிய 2017025/எஸ்எல் ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள், நீண்டகால இடம்பெயர்ந்த நபர்கள், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவராகக் காணப்படுகின்றது. பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமாவின் தரத்தினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,983.60 மில்லியனுக்கு சமமான யூரோ 9.50 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த கிரயமும் அவுஸ்ரியா ரெய்பெசன் வங்கியினால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளினை 2018 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஏப்ரல் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், செயன்முறையின் தற்போதைய தேவைகளுடன் இணங்கும்பொருட்டு புதிய ஆய்வுகூட உபகரணங்களினைக் கொள்வனவுசெய்தல், புதிய கட்டமொன்றின் நிர்மாணம் மற்றும் கட்டுநாயக்காவிலுள்ள பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தற்போது காணப்படும் கட்டிடங்களினை புனரமைத்தல் மற்றும் குறித்த நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பயிற்சிகளின் பாடத்திட்டத்தினை மேம்படுத்தல் போன்ற செயற்பாடுகள் செயற்திட்டத்தினால் அமுல்படுத்தப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. செயற்திட்டத்தின் செயல்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புதிய கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் கணிசமான அளவு பூர்த்தியடைந்திருந்த அதேவேளை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியடைந்து காணப்படவேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட தற்போது காணப்படும் கட்டிடத்தின் புனரமைப்பு வேலைகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 40 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. எவ்வாறாயினும், பயிற்சிப் பாடநெறிகளின் பாடத்திட்டத்தினை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்ப கட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது.